ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1767/23 - 2012 ජූලි මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.07.19

*1767/23 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I)- பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்***

*அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை இல. 02/2012*

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் நிதி, திட்டமிடல் அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி அவரால் ஆக்கப்பட்ட பின்வரும் கட்டளை அனைவரும் அறியவென இத்தால் வெளியிடப்படுகின்றது.*

*பீ. பி. ஜயசுந்தர,*
*செயலாளர்,*
*நிதி, திட்டமிடல் அமைச்சு.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2012, யூலை 19.*

***1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்***

*கட்டளை*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கும் வகையில் 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க , அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இதற்கான அட்டவணையின் 3 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள் ஒவ்வொன்றின் மீதும் அட்டவணையின் 5 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள பொது வீதத்தில் அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) அட்டவணை “அ” இன் ஏற்பாடுகளின் கீழுள்ள முன்னுரிமை வீதமொன்று விதிக்கப்பட்டு செலுத்தப்படக் கூடியதாக இருக்குமிடத்து அவ்வட்டவணையின் 4 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள முன்னுரிமை வீதத்தில் இறக்குமதித் தீர்வையைக் கோரி அறவிடுமாறு சுங்கப் பணிப்பாளர் தலைமை அதிபதியை, 2012, யூலை 20 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வருமாறு இக்கட்டளை மூலம் தேவைப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி*
*(நிதி, திட்டமிடல் அமைச்சர்).*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2012, யூலை 19.*

**அட்டவணை**

| இ. ப. தலைப்பு (1) | இ. மு. குறியீடு (2) | | விவரம் (3) | தீர்வை வீதம் முன்னுரிமை (4) | பொது (5) | அளவுக்கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| 22.07 | | | கன அளவிற்கு 80% வீதக்கனவளவு அல்லது அதற்கு மேற்பட்ட வலுவளவைக் கொண்ட இயல்பிழப்பு அடையாத ஈதல் அற்கோல், இயல்பிழப்பு அடைந்த எந்த வலுவளவிலுமுள்ள எதைல் அற்கோலும் பிற மதுசாரங்களும் | | | |
| | 2207.10 | | கன அளவிற்கு 80% வீதக்கனவளவு வலுவுடைய அல்லது அதற்கு மேற்பட்ட வலுவுடைய இயல்பிளக்காத ஈதல் அற்கோல். | | ஒரு லீற்றருக்கு ரூபா 200/- | லீ. |

8- 125